**போக்சோ வழக்கில் பாதிக்கப்பட்ட சிறுமியின் தந்தையிடம் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய லஞ்சம் கேட்டு வாங்கிய லால்குடி அனைத்து மகளிர் காவல் நிலைய பெண் காவல் ஆய்வாளர், திருச்சி லஞ்ச ஒழிப்பு காவல் துறையினரால் கைது.**

புகார்தாரரன் மகளுக்கு, ஜெகதீசன் என்பவர், பாலியல் ரீதியாக துன்புறுத்தலும் மற்றும் கொலைமிரட்டல் விடுத்து வந்த காரணத்தால், புகார்தாரர் லால்குடி அனைத்து மகளிர் காவல்நிலைய ஆய்வாளர் திருமதி.மாலதியிடம் கொடுத்த புகாரின்பேரில், ஜெகதீசனின் மீது போக்சோ சட்டத்தின்கீழ் லால்குடி அனைத்து மகளிர் காவல்நிலைய வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுத்துள்ளார். இந்நிலையில், ஆய்வாளர் திருமதி.மாலதி புகார்தாரரை காவல் நிலையத்திற்கு வரச்சொன்னதன் பேரில், கடந்த 10.12.2022 சனிக்கிழமை மதியம் சுமார் 12 மணியளவில் லால்குடி அனைத்து மகளிர் காவல் நிலையம் சென்று ஆய்வாளர் மாலதி அவர்களை சந்தித்தபோது ஆய்வாளர் மாலதி அவரிடம் உங்களது கேஸ் சம்மந்தமான புலன் விசாரணை அனைத்தையும் முடித்துவிட்டதாகவும், இனிமேல் கோர்ட்டில் சார்ஜ்சீட் போட வேண்டியதுதான் பாக்கி, அதனால், நீங்க எனக்கு 5000 ரூபாய் லஞ்சமாக கொடுத்திடுங்க என்று கேட்டுள்ளார். அதற்கு, புகார்தாரர், தான் பொம்பள புள்ளங்கள வச்சுகிட்டு ரொம்ப கஷ்டப்பட்டு குடும்பம் நடத்தி வருவதாகவும், 5000 ரூபாய் தன்னால் கொடுக்க முடியாத நிலையில் மிகவும் கஷ்டப்படுவதாகவும் கெஞ்சியதை பெண் காவல்ஆய்வாளராக இருந்தும் ஏற்காமல், புகார்தாரரிடம் வற்புறுத்தி 5000 ரூபாய் லஞ்சமாக கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாத புகார்தாரர், திருச்சி லஞ்ச ஒழிப்பு காவல்துறையினரிடம் 12.12.2022 அன்று புகார் மனுவை சமர்ப்பித்தார். இப்புகார்மனு சம்மந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு லஞ்ச ஒழிப்பு துறையினரின் ஆலோசனையின் பேரில் புகார்தாரர் லால்குடி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் இன்று 13.12.2022 தேதி காவல் ஆய்வாளர் திருமதி.மாலதி என்பவரை சந்தித்தபோது, புகார்தாரரிடம் அனைத்து மகளிர் காவல்நிலைய ஆய்வாளர் கேட்ட ரூ.5,000/– இராசயானம் தடவப்பட்ட லஞ்ச பணத்தை கேட்டுபெறும்போது, மறைந்திருந்த திருச்சி, லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்பு துறை காவல் துணை கண்காணிப்பாளர் தலைமையிலான போலீசார் எதிரி லால்குடி அனைத்து மகளிர் காவல்நிலைய காவல் ஆய்வார், திருமதி.மாலதி, என்பவரை கைது செய்து காவல் ஆய்வாளரிடமிருந்து ரூ.5,000/– லஞ்ச பணத்தை கைப்பற்றி, விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.